**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்**
**ஆத்தூர்**
**------**
**அசல் வழக்கு எண்.166/2019**

**2024**ம் வருடம் **மார்ச்** மாதம் **25**ம் நாள் வாதி தரப்பு சாட்சியான வா**.சா.1** ன் வாக்குமூலம் 1873ம் வருடத்திய 10வது விதியின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

பெயர் : விஜயன்
த/பெ. :ராமசாமிபிள்ளை
கிராமம் :திருப்பூர்
தாலுகா :
தேதி : 25.03.2024

ஜாதி :
தொழில் : வாட்ச்மேன் பணி
மதம் :
வயது :70/2024

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் இரண்டாவது வாதி ஆவேன். வாதி தரப்பு முதலாவது சாட்சியாவேன். எனது முதல் விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் நான் சொன்னது தான். அதில் உள்ள கையொப்பங்கள் என்னுடையது தான். மேலும் 05.02.1971 தேதியிட்ட 1 முதல் 5 வரையிலான வாதிகளின் தந்தை ராமசாமி என்பவர் தாவா சொத்தில் 2 செண்டை கிரையம் பெற்றதற்கான கிரையபத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1 ஆகவும், 21.04.1971 தேதியிட்ட 1 முதல் 5 வரையிலான வாதிகளின் தந்தை ராமசாமி என்பவர் தாவா சொத்தில் 3 செண்டை கிரையம் பெற்றதற்கான கிரையபத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.2 ஆகவும், 01.10.1971 தேதியிட்ட 1 முதல் 5 வரையிலான வாதிகளின் தந்தை ராமசாமி என்பவர் தாவா சொத்தில் 4 செண்டை கிரையம் பெற்றதற்கான கிரையபத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.3 ஆகவும், 16.07.1984 தேதியிட்ட 1 முதல் 5 வரையிலான வாதிகளின் தந்தை ராமசாமி என்பவர் தாவா சொத்தில் 4 செண்டை கிரையம் பெற்றதற்கான கிரையபத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.4 ஆகவும், 25.01.1993 தேதியிட்ட 1 முதல் 5 வரையிலான வாதிகளின் தந்தை ராமசாமி என்பவர் தாவா சொத்தில் ஒரு செண்டை கிரையம் பெற்றதற்கான கிரையபத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.5 ஆகவும், 15.03.2001 தேதியில் 1 முதல் 5 வரையிலான வாதிகளின் தந்தை ராமசாமிபிள்ளை இறந்ததற்கான இறப்பு சான்றிதழ் அசல் வா.சா.ஆ.6 ஆகவும், 04.12.2012 தேதியில் 2-ஆம் வாதியாகிய நான் பிரதிவாதி மீது செம்பட்டி காவல் நிலையத்தில் கொடுத்த புகாருக்கு வழங்கப்பட்ட புகார் மனு ஏற்பு சான்றிதழ் நகல் வா.சா.ஆ.7 ஆகவும், (மேற்கண்ட சான்றாவணம் நகல் என்பதால் பிரதிவாதி தரப்பு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது) 10.01.2013 தேதியில் 1 முதல் 5 வாதிகள் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ.8 ஆகவும், 12.01.2013 தேதியில் மேற்படி அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை அசல் வா.சா.ஆ.9 ஆகவும், 20.11.2013 தேதியில் 2-ஆம் வாதியாகிய நான் பிரதிவாதி மீது

திண்டுக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு அனுப்பிய புகார் மனு அலுவலக நகல் மற்றும் அசல் அஞ்சலக ரசீது வா.சா.ஆ.10 ஆகவும், 02.01.2016 தேதியில் தாவா சொத்து 1 முதல் 5 வாதிகளின் தந்தை பெயரில் இருப்பதற்குண்டான அடங்கல் கணக்கு உண்மை நகல் வா.சா.ஆ.11 ஆகவும், 03.01.2014 தேதியிட்ட தாவா சொத்து 1 முதல் 5 வாதிகளின் தந்தை பெயரில் உள்ள பட்டா உண்மை நகல் வா.சா.ஆ.12 ஆகவும், 07.01.2014 தேதியில் தாவா சொத்திற்கு வாதிகளால் செலுத்தப்பட்ட சொத்துவரி ரசீது அசல் வா.சா.ஆ.13 ஆகவும், 10.08.2023 தேதியில் தாவா சொத்திற்கு 2022-2023 மற்றும் 2023-2024 ஆண்டுகளுக்கு வாதிகளால் அவர்களது தந்தை பெயரில் செலுத்தப்பட்டதற்கான சொத்து வரி ரசீது அசல் வா.சா.ஆ.14 ஆகவும், 19.03.2024 தேதியில் தாவா சொத்தில் வாதிகள் குடியிருந்து வருவதற்கு மின்கட்டணம் செலுத்தப்பட்டதற்கான தற்பொழுது மின்கட்டணம் செலுத்தியதற்கான ரசீது அசல் வா.சா.ஆ.15 ஆகவும், 19.03.2024 தேதியில் தாவா சொத்தில் வாதிகள் தொடர்ந்து தற்பொழுது குடியிருந்து வருவதற்கான 6 புகைப்படங்கள் மற்றும் CD மற்றும் அதற்கான ரசீது வா.சா.ஆ.16 ஆகவும் (மேற்கண்ட சான்றாவணம் உரிய சான்றிதழ் மற்றும் அபிடவிட் இல்லாத காரணத்தினால் பிரதிவாதி தரப்பு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது.) குறியீடு செய்யப்படுகிறது. எனவே தாவாப்படி தீர்ப்பும், தீர்ப்பாணையும் பிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

Sd/.P.Jaisankar
District Munsif Cum Judicial Magistrate,
Athoor.